# கிறிஸ்தவம்

## தரம்

# 5

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்
www.edupub.gov.lk வலைதளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2019

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0060-2

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 105 - 1 லேக் வீதி, அம்பன்தல, முல்லேரியா புதிய நகரத்தில்
அமைந்துள்ள பராமவுன்ட் சொலூவின்ஸ் பிரைவட் லிமிடெட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

நாளுக்கு நாள் உலகம் புதிதாகின்றது. மாற்றமுறுகின்றது. அதை சரியாகப் புரிந்து கொண்டு காணப்படக்கூடிய நல்லவற்றை பாதுகாப்பதற்கும் மாற்றமுறும் உலக சவால்களைப் பலமாக எதிர்கொள்வதற்கும் கற்றலானது உங்களுக்கு வழிகாட்டுகின்றது. ஒருவருக்கொருவர் நட்புடன் செயற்பட்டு சூழலுக்கும் வேலையுலகிற்கும் பொருந்துமாறு ஓய்வினைப் பயனுள்ளதாகக் கழித்து சமநிலை ஆளுமை கொண்டதொரு பிரசையாவதற்குத் தேவையான திறன்களை உங்களுக்குப் பெற்றுத்தருவதே எமது இலக்காகும்.

உள்நாட்டில் போன்றே சர்வதேசத்துடனும் சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்பக்கூடிய சமநிலை ஆளுமை கொண்ட ஒருவராவதற்கு உங்களுக்குத் துணைக்கரமான கற்றல் சாதன உற்பத்திக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

2016 ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புதிய பாடத்திட்டத்தின் கீழ் தரம் 1 முதல் தரம் 4 வரை அண்ணளவாக 25 வகையான பாடநூல்கள் இது வரைக்கும் உங்கள் கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்ற இப்பாடநூல்கள் மூலம் மிக உயர்ந்தமட்டப் பயன்களைப் பெற்றுக் கொள்வதுடன் அவற்றை உங்கள் கண்களைப் போன்று பாதுகாப்பதும் உங்கள் கடமையென்பதை நினைவூட்டுகின்றேன். புதிய பாடத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்ற இப்புதிய பாடநூல்களை நன்கு கற்று அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் உங்கள் திறன்களையும் செயலாக்கத்தையும் வளர்த்துக்கொண்டு கௌரவத்துடன் எதிர்கால உலகில் நுழைவதற்கு உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்நூலை உங்கள் கைகளில் தருவதற்கு உழைத்த எழுத்தாளர் மற்றும் பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

| | | |
|---|---|---|
| **கண்காணிப்பும் மேற்பார்வையும்** | : | **டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **வழிகாட்டல்** | : | **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **இணைப்பாக்கம்** | : | **ஆர். டீ. விஜேவிக்ரம**<br>பிரதி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| | : | **எஸ். ஜீ. டீ. என். எல். சமரக்கோன்**<br>உதவி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| | : | **அ. ஞானேஸ்வரன்**<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **பதிப்பாசிரியர் குழு** | : | **அருட்பணி. சி. டபிள்யூ. சி. பால்ராஜ்**<br>அதிபர்<br>பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை. |
| | : | **அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**<br>செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு. |
| | : | **கே. ஆர். சேபாளிகா**<br>ஆசிரியர்<br>கிறிஸ்துராஜா தேசிய பாடசாலை<br>துடெல்ல, ஜாஎல. |
| **எழுத்தாளர் குழு** | : | **டி. குளோரி எப்சிபா**<br>ஆசிரியர்<br>கம்பளை இந்துக் கல்லூரி, கம்பளை. |

: **எம். பி. எஸ். பெரேரா**
ஆசிரிய ஆலோசகர் கிறிஸ்தவம்
(ஓய்வு நிலை.)

: **எஸ். பீ. சீ. பிரனாந்து**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி
கொழும்பு.

: **மல்மி ரஷ்மிதா பீரிஸ்**
ஆசிரியர்
வேல்ஸ் குமரி வித்தியாலயம்,
மொரட்டுவ.

: **நிலுகா சாமினி உடுமுல்ல**
ஆசிரியர்
கிங்ஸ்வுட் வித்தியாலயம்
கண்டி.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **எஸ். வடிவேல்**
ஆசிரியர்
பரி. ஜோன்ஸ் வித்தியாலயம்
தெமட்டகொட.

**சித்திரம், அட்டை வடிவமைப்பு** : **கே.ஏ.எஸ். களுபோவில**
விரிவுரையாளர்
தேசிய கல்வியற் கல்லூரி
ஹாபிட்டகம, மீரிகம.

**சரவை பார்ப்பு** : **ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.

**கணினி வடிவமைப்பு** : **நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | படைப்பைப் பராமரித்தலும் பாதுகாத்தலும் | 1 |
| 2. | கடவுளின் படைப்பின் சிகரம் மனிதன் | 5 |
| 3. | யோசேப்பு | 10 |
| 4. | செங்கடலைக் கடத்தல் | 14 |
| 5. | தெபோரா | 18 |
| 6. | தொற்கா | 21 |
| 7. | இறையாசியும் எமது மாறுத்தரமும் | 25 |
| 8. | கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம் | 28 |
| 9. | இறை உறவை வளர்ப்போம் | 32 |
| 10. | குணமளிக்கும் இயேசு | 35 |
| 11. | இயேசு பாவிகளை ஏற்றுக்கொள்கின்றார் | 38 |
| 12. | பகைவரை நேசிப்போம் | 42 |
| 13. | பேதமின்றி அனைவரையும் ஏற்றுக் கொள்வோம் | 45 |
| 14. | எல்லையில்லாத மன்னிப்பு | 48 |
| 15. | பரிவு காட்டிய இயேசு | 51 |
| 16. | பொறுமையோடு செயற்படுவோம் | 53 |
| 17. | சிறுவருக்கு அன்பு செலுத்துதல் | 56 |
| 18. | தூய ஆவியானவரை அறிந்து கொள்வோம் | 59 |
| 19. | ஆரம்பக் கிறிஸ்தவ சபையில் பகிர்வு | 63 |
| 20. | புயலை அமைதிப்படுத்தல் | 68 |
| 21. | இறைவன் தரும் சுகம் | 72 |
| 22. | மரணத்தைக் கடந்த இறைவல்லமை | 76 |
| 23. | பழைய ஏற்பாடு | 80 |
| 24. | ஆண்டவரே நம் ஆயர் | 83 |

# 1 படைப்பைப் பராமரித்தலும் பாதுகாத்தலும்


## தொடக்க நூல் 1:26, 29-30, 2: 19-20











கடவுள் அருளிய அழகிய படைப்புகளைக் குறித்து கடந்த வகுப்புக்களில் நீங்கள் கற்றுள்ளீர்கள். கடவுள் வானத்தையும் பூமியையும் அவற்றில் காணப்படும் அனைத்தையும் படைத்தார் என்பதை நாமறிவோம். இந்த சூழலையும் அங்கு வாழும் மிருகங்களையும் நிருவகிக்கும் அதிகாரத்தைக் கடவுள் தமது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதருக்கு வழங்கினார். அது பற்றிய விபரம் திருவிவிலியத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

‘‘அப்பொழுது கடவுள் மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும் கால்நடை களையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்’’ என்றார்.

**தொடக்கநூல் 1:26**

கடவுள் மானிடரிடம் காட்டிய அளப்பரிய அன்பினால், படைப்பைப் பராமரித்துப் பாதுகாக்கும் மகத்தான பொறுப்பை மனிதரிடம் ஒப்படைத்தார். எமது சூழல் மற்றும் உயிரினங்களின் படைப்பாளர் ஆண்டவர். அவற்றிற்குப் பெயரிடும் செயலை முதல் மனிதனிடம் ஒப்படைத்தார்.

உயிரினங்கள் உயிர் வாழ உணவு அத்தியாவசியமாகும். உலக ஆரம்பத்தில் எமது உணவுக்காக நியமித்தவை திருவிவிலியத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பொழுது கடவுள், ''மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன். இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டு விலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்'' என்றார்.

**தொடக்கநூல் 1: 29-30**

இவ்வாறு மானிடருக்கும் விலங்குகளுக்கும் கடவுள் உணவாக தாவரங்களையும் தானிய வகைகளையும் அளித்தார்.

கடவுளால் படைக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் மிருக உலகம் ஊடாக எமது வாழ்விற்குப் பல பயன்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று எமது தீய செயற்பாட்டால் நாம் எமது சுற்றாடலையும் மிருக உலகையும் அழிவுக்கு உட்படுத்துகின்றோம். இவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகள் சில:

- குப்பைகளை வகைப்படுத்தி உரிய முறையில் அகற்றி சுற்றா டலைச் சுத்தமாகப் பேணுதல்.
- மரங்களை அழிக்காது பாதுகாத்தல், வளர்த்தல்.
- கடவுள் அருளிய கொடைகளான ஆறு, குளம், வாய்க்கால் போன்றவற்றை பாதுகாத்தல்.
- உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்காது இருத்தல்.

**கடவுள் அன்புடன் அருளிய அழகிய இறைபடைப்பைப் பாதுகாப்போம்! விருத்தியாக்குவோம்!**

**மனன வாக்கியம்**

***திருப்பாடல் 8:8***

***வானத்துப் பறவைகள், கடல் மீன்கள் ஆழ்கடலில் நீந்திச் செல்லும் உயிரினங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்.***

## செயற்பாடு

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அழகிய உலகைப் படைத்தவர் யார்?
2. இறை படைப்பில் எமது பொறுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
3. இறைவன் ஆரம்பத்தில் மனிதருக்குக் கொடுத்த உணவு வகைகள் எவை?
4. இறை படைப்பு அழிக்கப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.
5. கிறிஸ்தவ மாணவர்களாகிய நீர் கடவுளின் படைப்பைப் பாதுகாக்கும் வழிமுறைகள் 5 எழுதுக.

# 2 கடவுளின் படைப்பின் சிகரம் மனிதன்

## தொடக்க நூல் 1:27 - 28



உரு 2.1 கடவுளின் படைப்பின் சிகரம்


**ஆசிரியர்** : இறையாசிகள் பிள்ளைகளே! உங்கள் அனை வருக்கும் காலை வணக்கம்.

**மாணவர்கள்** : இறையாசிகள்! இனிய காலை வணக்கம் ஆசிரியர்!

**ஆசிரியர்** : இன்று நாம் தொடக்கநூல் 1:27 ஆம் வசனங்களை வாசிப்போம். சலோமி, தொ.நூ. 1:27 ஆம் இறை வசனத்தை வாசியுங்கள்.

**சலோமி** : ‘‘கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.’’ (தொடக்கநூல் 1:27)


**ஆசிரியர்** : நன்றி சலோமி... கடவுளின் படைப்பின் சிகரம் மனிதர் ஆவர். கடவுள் அவர்களுக்கு வழங்கிய பெறுமதியைக் காட்டுவதற்காக பின்வரும் உருவை அவதானிப்போம்.




கடவுளின் படைப்புகளில் புதுமையானதும் ஒப்பற்றதுமான படைப்பு ஆணும் பெண்ணும் ஆவர். கடவுள் மனிதருக்குப் பல பொறுப்புக்களை வழங்கினார். அவற்றை அறிந்து கொள்வதற்கு தொ.நூ. 1:28 ஐ வாசிப்போம்.

**ரூபன்** : ‘‘கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கிப் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள் வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்’’ என்றார். (தொடக்கநூல் 1:28)

**ஆசிரியர்** : நன்றி ரூபன்...! கடவுளின் படைப்புக்களில் உத்தம படைப்புக்களான ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆசி வழங்கி மூன்று பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைத்தார். அவைகளை காட்சிப்படுத்த சிநேகா, தீபன், நகோமி மூவரும் ஆயத்தமாக உள்ளனர்.



*கடவுள் மனிதரிடம் காட்டிய அளப்பரிய அன்பின் நிமித்தமாக அவர் எம்மிடம் ஒப்படைத்துள்ள பொறுப்புக்களைச் சரியான முறையில் நிறைவேற்றுதல் எமது கடமையாகும்.*

*கடவுள் வழங்கியுள்ள ஆண் - பெண் இருபாலாரும் நல்ல கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டுமென எதிர்பார்க்கின்றார். கடவுள் எமக்கு வழங்கிய பொறுப்பைச் சரியான வகையில் நிறைவேற்ற எமக்குத் தேவையான வழிகாட்டலை அருளுமாறு விண்ணப்பம் செய்வோம். உங்கள் அனைவருக்கும் இறையாசிகள்!*

**மாணவர்கள் :** *இறையாசிகள் ஆசிரியர்!*

**நான் கடவுளின் பெறுமதிமிக்க பெண்பிள்ளை ஆவேன்!**
**நான் கடவுளின் பெறுமதிமிக்க ஆண்பிள்ளை ஆவேன்!**
**கடவுள் வழங்கிய பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றுவோம்!**



**விண்ணப்பம்**

***அன்பான தந்தையே, நீர் எங்களை நேசித்து உமது படைப்புக்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பைத் தந்தமைக்காக உமக்கு நன்றி. கடவுளது படைப்பின் பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்ற எமக்கு அருள்தாரும்!***

***ஆமென்.***



## செயற்பாடு

1. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் கூட்டினுள் அடையாளமிடுங்கள்.

i. கடவுளின் படைப்பின் சிகரம் மனிதன். ( )

ii. கடவுளின் படைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பை மனிதரிடம் ஒப்படைத்தார். ( )

iii. நாம் கடவுளின் படைப்புக்களை அழிக்க வேண்டும். ( )

iv. உயிரினங்களை ஆளும் அதிகாரத்தை கடவுள் மனிதருக்கு வழங்கவில்லை. ( )

v. நான் ஆண்டவருக்குப் பெறுமதிமிக்க பிள்ளை ஆவேன். ( )

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i. கடவுள் மனிதரிடம் படைப்புக்களை ஒப்படைத்து வழங்கிய பொறுப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக.

ii. கடவுள் அருளிய உலகுக்கு நன்றி செலுத்தி சிறு விண்ணப்பம் எழுதுக.

# 3 யோசேப்பு

## தொடக்க நூல் 41 : 33 - 49



உரு 3.1 இளைஞன் யோசேப்பு

அன்பான பிள்ளைகளே,
நான் யோசேப்பு. எனது தந்தை யாக்கோபு. அவர் என்னை அதிகம் நேசித்தார். ஆனால் எனது சகோதரர்கள் என்மீது பொறாமை கொண்டார்கள். அவர்கள் என்னை எகிப்து நாட்டுக்கு விற்றார்கள். நான் அறியாத அந்த நாட்டில் கடவுள் என்னைப் பாதுகாத்தார். நான் அங்கு நிகழ்ந்த அனுபவத்தை இன்று உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

அக்காலத்தில் எகிப்து நாட்டை ஆட்சிசெய்த அரசன் இரு கனவுகள் கண்டார். அழகிய ஏழு கொழுத்த பசுக்களை நலிந்து மெலிந்த பசுக்கள் விழுங்கிவிட்டன. இது அரசன் கண்ட முதல் கனவாகும். இரண்டாவது கனவு பதரான கதிர்கள் ஏழும் செழுமையான முற்றிய கதிர்களை விழுங்கிவிட்டன. இந்த கனவுகளை விளக்கிப் பொருள் கூற எவரும் இருக்கவில்லை. இதனால் பார்வோன் அரசன் கனவுகளுக்குப் பொருள் கூறும் சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கினார்.

எகிப்து நாடெங்கும் மிக வளமான ஏழு ஆண்டுகள் வரும். அதன் பின் ஏழு ஆண்டுகள் பஞ்சம் உண்டாகும் என்பது அந்தக் கனவுகளின் பொருளாகும். நான் கனவுகளின் பொருளை விளக்கிய பின்னர் எனது கருத்துக்களைப் பார்வோன் அரசனுக்குக் கூறினேன். மதிநுட்பமும் ஞானமும் நிறைந்த ஒருவரைக் கண்டுபிடித்து எகிப்து நாட்டின் அதிகாரியாக அமர்த்த வேண்டும். ஏழு வளமான ஆண்டுகளில் உணவுகளைச் சேமித்து வைக்கப்பட மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தினேன். இவ்வாறு உணவு சேமித்து வைக்கப்படுமானால் பஞ்சம் ஏற்படும் ஏழு ஆண்டுகளில் நாட்டைக் காப்பாற்ற முடியும் என உறுதியாகக் கூறினேன். பார்வோன் அரசன் எனது ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டார்.




உரு 3.2 யோசேப்பு எகிப்து நாட்டின் அதிகாரி பதவி பெறுதல்

இவைகள் அனைத்தையும் அறிந்து கொள்வதற்குக் கடவுள் எனக்கு வழிகாட்டினார். எனது ஆலோசனைகளைக் கேட்டு மகிழ்வுற்ற பார்வோன் அரசன் என்னை எகிப்து நாட்டின் அதிகாரியாக நியமித்தார்.

உண்மையிலேயே இது ஒரு புதுமையான அனுபவம் ஆகும். நான் எதிர்பாராத வண்ணம் கடவுள் என்னை உயர்த்தினார்.

நான் எகிப்து நாட்டுக்கு அடிமையாக வந்தேன். நான் அங்கு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தேன். ஆனால் கடவுள் எனக்குப் பாதுகாப்பு அளித்தார்.



உரு 3.3 பஞ்ச காலத்துக்கு தானியம் சேகரித்தல்

வளமான ஏழு ஆண்டுகளில் அனைத்து உணவுப் பொருள்களையும் களஞ்சியத்தில் சேகரித்தேன். கடற்கரை மணல் அளவுக்கு நாம் தானியங்களைச் சேகரித்தோம். உண்மையிலேயே இவ்வாறான ஆசியைக் கடவுள் தாமே வழங்கினார். பஞ்சகாலத்தில் எமக்கு உணவுக் குறைவு ஏற்படவில்லை. நான் கடவுளுக்கு நன்றி கூறினேன். கடவுள் எனக்கு மட்டுமல்ல எகிப்து நாட்டிலுள்ள அனைவருக்கும் உணவு அளித்தார்.

பிள்ளைகளே, ஆண்டவர் எனது வாழ்வை நாள்தோறும் உயர்த்தினார். பாதுகாப்பு வழங்கினார். எனது சகோதரர்கள் அறியாத நாடொன்றுக்கு என்னை விற்றார்கள். நான் கடவுளது திட்டத்துக்கு அமைய உயர்த்தப்பட்டேன். கடவுள் எப்போதும் என்னுடன் இருந்தார்.

ஆண்டவர் உங்களுக்கு நிலையான சமாதானத்தை வழங்குவார்.

உங்கள் அனைவருக்கும் இறையாசிகள்!
இவ்வண்ணம்,
யோசேப்பு.


**நாம் யோசேப்பு போன்று கடவுளின் பாதுகாப்பைப் பெற்று வாழ்வோம்!**



**மனன வாக்கியம்**

*“ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்; அவரிடம் அடைக்கலம் புகுவோர். பேறு பெற்றோர்.*

*திருப்பாடல்கள் 34:8*



## செயற்பாடு

பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.


(கடவுளின் பாதுகாப்பை, ஏழு, யோசேப்பு, அடிமையாக, அதிகாரியாக)

1. யோசேப்பு எகிப்து நாட்டுக்கு ...................... வந்தார்.
2. பார்வோனின் கனவுகளுக்கு ..................... பொருள் கூறினார்.
3. எகிப்து நாட்டில் யோசேப்பு .................... நியமிக்கப்பட்டார்.
4. பஞ்சம் ஏற்பட்ட .................... ஆண்டுகளுக்கு கடவுள் பாதுகாப்பு வழங்கினார்.
5. சிறுபிள்ளைகளாகிய நாம் யோசேப்பைப் போன்று ................. உணர்வோம்.

# 4 செங்கடலைக் கடத்தல்

**விடுதலைப் பயணம் 14:15 - 31**

இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் பல ஆண்டுகள் அடிமைகளாகத் துன்புற்று வாழ்ந்தார்கள். அவர்கள் இறைவனை நோக்கி விண்ணப்பம் செய்தார்கள். அதைக் கேட்ட ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை அடிமை நிலையிலிருந்து மீட்டு வாக்குறுதி பண்ணிய நாட்டை நோக்கிப் பயணம் செய்ய வழிகாட்டினார். அவர்களுக்குத் தலைமைத்துவம் வகிக்க மோசேயைத் தெரிவு செய்தார். மோசேயின் வழிகாட்டலால் இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேற பார்வோன் அரசன் அனுமதி வழங்கினார். அவர்கள் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் பார்வோன் அரசன் தனது தீர்மானத்தை மாற்றினார். இஸ்ரயேல் மக்களைப் பின் தொடர்ந்து சென்றார்.



இஸ்ரயேல் மக்கள் செங்கடலுக்கு அருகில் வந்தனர். தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல முடியாமல் ஆண்டவரிடம் கூக்குரலிட்டனர். அப்போது அவர்களுக்கு முன் சென்ற மேகத்தூண் இடம்பெயர்ந்து எகிப்தியரின் படைகளுக்கும் இஸ்ரயேலருக்கும் இடையில் வந்து நின்று அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. அப்போது ஆண்டவர் மோசேயிடம் கோலைக் கடல் மேல் நீட்டுமாறு கட்டளையிட்டார்.



நாம் செங்கடலைக் கடப்பது எப்படி? அதோ மோசே கோலைக் கடல் மேல் நீட்டுகிறார். என்ன நடைபெறும் என்பதை நாம் பார்ப்போம்.

மோசே கோலைக் கடல்மேல் நீட்டியபோது கடல் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.



என்ன ஆச்சரியம்...! இது அற்புதம்! ஆண்டவர் கடலை இரண்டாகப் பிரிக்க வழிகாட்டினார். நாம் விரைவாக முன் செல்வோம்.

இஸ்ரயேல் மக்கள் கடலின் உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். பார்வோனும் குதிரை வீரர்களும் இஸ்ரயேல் மக்களின் பின்தொடர்ந்தனர்.




பார்வோனின் படை கடலுக்கு நடுவில் வந்தவுடன் ஆண்டவர் மோசேயிடம் கோலை கடல்மேல் நீட்டுமாறு கட்டளையிட்டார். அப்போது இரண்டாகப் பிரிந்த கடல் மீண்டும் ஒன்று சேர்ந்தது. பார்வோன் அரசனின் படைவீரர்கள் கடலில் மூழ்கினார்கள்.

கடவுள் அற்புதமாகக் கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ரயேல் மக்களைப் பாதுகாப்பாக வழி நடத்தினார்.

**இஸ்ரயேல் மக்களைப் போன்று நாமும் அற்புதமான பாதுகாப்பை உணர்வோம்!**



**விண்ணப்பம்**

***அன்பான தந்தையே, எமது வாழ்வில் ஏற்படும் துன்பங்களில் எமக்கு இறை வழிகாட்டலையும் பாதுகாப்பையும் வழங்கி அருளும்!***

***ஆமென்.***



## ஒப்படை

1. ஆண்டவர் கடலை இரண்டாகப் பிரித்த அற்புத நிகழ்வில் நீர் விரும்பும் சந்தர்ப்பம் ஒன்றினைச் சித்திரமாக வரையுங்கள்.

2. எமது நாளாந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளில் கடவுளின் வழிகாட்டலையும் பாதுகாப்பையும் வேண்டி சுருக்கமான விண்ணப்பம் ஒன்று எழுதுக.

# 5 தெபோரா

## நீதித் தலைவர்கள் 4: 4 - 8

ஆண்டவர் காலம் காலமாய் - இஸ்ரயேல் மக்களைக் காக்கவென
நீதித் தலைவர்களை நியமித்தாரே - அவர்களும் மக்களை வழிநடத்தினரே

யாபின் எனும் கொடிய மன்னன் - 20 ஆண்டுகள் ஆட்சி செய்தானே
இஸ்ரயேல் மக்களுக்கு - பெருந்துன்பம் விளைத்தானே

யாபின் படைத்தலைவன் சீசரா - தொள்ளாயிரம் இரும்புத் தேர்களுடன்
பெரும் சேனைப் படையும் - கொண்டிருந்தானே

இஸ்ரயேல் மக்களெல்லாம் பயத்தில் - ஆண்டவரிடம் முறையிடவே
தெபோராவை நியமித்தார் - ஆண்டவர் அந்தக் காலத்திலே

ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்த தெபோரா - ''பேரீச்சைமர'' நிழலிலே
இஸ்ரயேல் மக்களுக்கு - நல் ஆலோசனைகள் கூறினாளே

ஆண்டவர் கட்டளைப்படியே - தெபோரா பணியாற்றினாளே - அவள்
பாராக் எனும் மனிதனிடம் - பொறுப்பொன்றை வழங்கினாளே



உரு 5.1 தெபோரா பாராக்குவிடம் ஆலோசனை கூறுதல்

**பத்தாயிரம் பேர் தாபோர் - மலையில் ஒன்று கூடிடவே ஆண்டவரது ஆணையை தெபோரா - பாராக்கிடம் அறிவுறுத்தினாளே**

**போராட்டத்திலே ஆண்டவர் - நம்முடன் இருப்பாரே**
**துணிவுடன் சீசராவின் படைகளை - வெற்றி கொள்வோமே**

**அவளின் அறிவுரைகளை - அனைவரும் பின்பற்றினரே**
**இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் - மாபெரும் வெற்றியைக் கொடுத்தாரே**

**இஸ்ரயேல் வரலாற்றின் வீராங்கனை - எனும் பெருமை**
**தெபோரா எனும் நீதித் தலைவி - பெற்றாள் செயலாலே**

**தெபோராவைப் போன்று ஆண்டவரின் வழிநடத்தலை**
**தினமும் நாம் பெறுவோம்!**
**சரியான தலைமைத்துவம் வகித்திடுவோம்!**



மனன வாக்கியம்

*திருப்பாடல்கள் 20:7*
*சிலர் தேர்ப்படையிலும் சிலர் குதிரைப்படையிலும் பெருமை கொள்கின்றனர். நாமோ நம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில் பெருமை கொள்கின்றோம்.*

## செயற்பாடு

பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | X | X | X | X | சீ 5 | X | X |
| X | தா 4 | X | X | X | | X | X |
| தெ 1 | | | X | X | ரா | X | X |
| X | ர் | X | X | X | X | X | பே 6 |
| X | X | X | X | X | X | X | |
| 2 | பி | | X | X | X | X | |
| X | X | X | X | X | X | X | சை |
| ப 3 | | தா | | | ம் | X | X |

இடமிருந்து வலம்

1. இஸ்ரயேலரின் நீதித் தலைவி
2. இஸ்ரயேலரைத் துன்புறுத்திய மன்னன்
3. பாராக்குடன் சென்றவர்களின் எண்ணிக்கை

மேலிருந்து கீழ்

4. தெபோரா பாராக்குவிடம் செல்லுமாறு கூறிய மலை
5. யாபினின் படைத் தலைவன்
6. தெபோரா அமர்ந்திருந்து தீர்ப்பு வழங்கிய இடம்

# 6 தொற்கா

## திருத்தூதர் பணிகள் 9: 38 - 42

யோப்பா நகரில் தபித்தா எனும் பெயருடைய பெண் ஒருவர் இருந்தார். அவர் தொற்கா என்றும் அழைக்கப்பட்டார். இவர் பல நன்மையான செயல்களைச் செய்வதிலும் இரக்கம் புரிவதிலும் ஈடுபட்டிருந்தார். ஒருநாள் இவர் உடல்நலம் குன்றி இறந்து விட்டார். அவரது உடலைக் குளிப்பாட்டி மேல் மாடியில் வைத்தார்கள். பேதுரு யோப்பாவுக்கு அருகிலுள்ள லித்தா என்னும் ஊருக்கு வந்திருப் பதைச் சீடர்கள் கேள்விப்பட்டனர். இரு மனிதர்கள் அவரை அழைத்து வருமாறு புறப்பட்டுச் சென்றனர்.

**மனிதர்கள்** : ''பேதுரு... பேதுரு யோப்பாவில் வாழ்ந்த தொற்கா நோயுற்று மரித்து விட்டாள். எம்மோடு விரைந்து வாருங்கள்''.

**பேதுரு** : ம்... நல்லது நாம் போவோம். (பேதுரு வந்தவுடன் அவரை அங்கிருந்தவர்கள் மேல்மாடிக்கு அழைத்துச் சென்றனர். கைம்பெண்கள் துக்கமுடன் அழுத வண்ணம்...)



உரு 6.1 தொற்காவின் சுகவீனத்தை பேதுருவுக்கு அறிவித்தல்

**கைம்பெண்கள்** : ஐயோ... தொற்கா எங்களுடன் இருக்கும்போது தைத்துக் கொடுத்த ஆடை இதோ இருக்கின்றது.



உரு 6.2 தொற்கா தைத்த ஆடைகளை பேதுருவுக்கு காட்டடல்

**பேதுரு** : எல்லோரும் சற்று வெளியே நில்லுங்கள்.

**மக்கள்** : நல்லது. நாங்கள் வெளியே செல்கின்றோம். (பேதுரு முழந்தாள் படியிட்டு இறை வேண்டுதல் செய்த பின்னர்...)



உரு 6.3 பேதுரு தொற்கா அருகில் சென்று விண்ணப்பம் செய்தல்

**பேதுரு** : ''தபித்தா, எழுந்திரு''
(உடனே அவள் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு எழுந்து உட்கார்ந்தாள். பேதுரு அவளுடைய கைகளைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார். பேதுரு அங்கு நின்றவர்களிடம் தபித்தாவை ஒப்படைத்தார்.)



உரு 6.4 குணமடைந்த தொற்கா

**மக்கள்** : என்ன ஆச்சரியம்... தொற்கா... உயிருடன் எழுப்பப் பட்டார்... கடவுளுக்கு மகிமை உண்டாவதாக!... பேதுருவின் விண்ணப்பத்துக்குக் கடவுள் பதில் அளித்தார்.

**அன்று**

**பேதுரு ⟶ விண்ணப்பம் செய்தபோது ⟶ கடவுள் பதில் அளித்தார்**

**இன்று**

**சிறுபிள்ளை ⟶ விண்ணப்பம் செய்யும்போது ⟶ கடவுள் பதில் அளிப்பார்**

**பேதுருவைப் போன்று விண்ணப்பம் செய்வோம்!**
**கடவுள் பதில் அளிப்பார்!**



**விண்ணப்பம்**

***அன்பான தந்தையே, சிறுபிள்ளையாகிய நான் உம்மிடம் வேண்டுதல் செய்கின்றேன். நீர் என்னுடன் பேசும். பதில் தந்தருளும். எப்போதும் என்னுடன் இருக்குமாறு மன்றாடுகின்றேன்.***

***ஆமென்.***



## செயற்பாடு

1. (அ) பகுதிக்கு பொருத்தமான விடையை (ஆ) பகுதியிலிருந்து தெரிவுசெய்து இணையுங்கள்.

| (அ) | (ஆ) |
| --- | --- |
| ▪ தொற்காவின் மறுபெயர் | ▪ பேதுரு |
| ▪ தொற்கா செய்த நற்செயல் | ▪ லித்தா |
| ▪ தொற்கா தைத்த ஆடைகளைக் காட்டி அழுதவர்கள் | ▪ தபித்தா |
| ▪ தொற்காவை உயிரோடு எழுப்பியவர் | ▪ இரக்கச் செயல் |
| ▪ யோப்பாவுக்கு அருகில் காணப்படும் ஊர் | ▪ கைம்பெண்கள் |

# 7 இறையாசியும் எமது மாறுத்தரமும்

## 1. சாமுவேல் 1: 21-28



உரு 7.1 அன்னா விண்ணப்பம் செய்தல்

அன்னாவும் எல்கானாவும் கடவுளை நேசித்து வாழ்ந்தார்கள். அவர்கள் ஆண்டுதோறும் சீலோவில், கடவுளுக்குப் பலி செலுத்தி வழிபட்டனர். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை என்பதால் அன்னா கவலையுடன் காணப்பட்டாள். அன்னா ஆண்டவர் திருமுன் அழுது மன்றாடினாள்.

ஒருநாள் அன்னா சீலோவில் வழிபடும் இடத்தில் ''படைகளின் ஆண்டவரே! நீர் உம் அடியாளாகிய என் துயரத்தைக் கண்ணோக்கி என்னை மறவாமல் நினைவு கூர்ந்து எனக்கு ஒரு ஆண் குழந்தையைத் தந்தருளும். அவனை வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன்'' என ஆண்டவர் திருமுன் மன்றாடினாள். ஆண்டவர் அன்னாவின் மன்றாடலைக் கேட்டருளினார். கடவுள் உரிய காலத்தில் அன்னாவுக்கும் எல்கானாவுக்கும் ஆண் குழந்தையைக் கொடுத்தார். அன்னா குழந்தைக்கு சாமுவேல் எனப் பெயரிட்டார். சாமுவேல் எனும் பெயரின் பொருள் ''ஆண்டவரிடமிருந்து கேட்டேன்'' என்பதாகும்.

அன்னா, குழந்தை சாமுவேலை அன்புகாட்டி வளர்த்தாள். பாலூட்டி வளர்க்கும் காலம் முடிவடைந்த பின்னர் அவர்கள் சீலோவில் ஆண்டவரிடம் கூறிய வாக்குகளை நிறைவேற்ற ஆயத்தமாகினர்.


அவர்கள் சீலோவிலிருந்து ஆண்டவரின் இல்லத்துக்கு வந்து பலிப்பொருள்களைப் பலியிட்டார்கள். பின் சாமுவேலை ஏலியிடம் கொண்டு வந்தனர். ''இப் பையனுக்காகவே நான் வேண்டிக் கொண்டேன். நான் ஆண்டவரிடம் விண்ணப்பித்த என் வேண்டுகோளை அவர் கேட்டருளினார். ஆகவே நான் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறேன். அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன்'' என்று அன்னா ஏலியிடம் கூறினாள்.




உரு 7.2 சாமுவேலை குரு ஏலியிடம் அழைத்து வருதல்

ஆண்டவர் அன்னாவின் வேண்டுகோளை நிறைவேற்றினார். அன்னாவும் எல்கானாவும் இறையாசிக்கு ஏற்ற மாறுத்தரத்தை அளித்தனர். அவர்கள் ஆண்டவரிடம் கூறிய வாக்குகளை நிறைவேற்றினர். அன்னா தனது ஒரே மகனை இறைபணிக்காக அர்ப்பணிக்கும் தியாக மனம் உடையவராக இருந்தார்.

எமது வாழ்வில் ஆண்டவர் பல ஆசிகளை வழங்கியுள்ளார். அன்னா - எல்கானா போன்று நாமும் இறைவனிடமிருந்து கிடைத்த ஆசி களுக்கு மாறுத்தரம் காண்பிக்க வேண்டும்.




**கடவுளின் ஆசிகளைப் பெறுவோம்.**
**மாறுத்தரம் காட்டுவோம்!**



**மனன வாக்கியம்**

***கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை. (லூக்கா 1:37)***



## செயற்பாடு

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ‘‘சாமுவேல்’’ எனும் பெயரின் பொருள் யாது?
2. அன்னாவும் எல்கானாவும் ஆண்டவருக்கு எங்கே பலி செலுத்தினார்கள்?
3. அன்னா சாமுவேலை யாரிடம் ஒப்படைத்தார்?
4. கடவுளால் உமக்குக் கிடைத்த ஆசிகளுக்கு நீர் காட்டும் மாறுத்தரம் இரண்டினை பாடத்தின் துணையுடன் எழுதுக.

# 8 கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்

## லூக்கா 1 : 6 - 7, 24 - 25, 54 - 68

செக்கரியாவும் எலிசபெத்தும் வயது முதிர்ந்தவர்கள். அவர்கள் கடவுள் பார்வையில் நேர்மையானவர்கள். ஆண்டவரின் கட்டளைகளுக்கு ஏற்ப வாழ்ந்து வந்தார்கள். செக்கரியா குருத்துவப் பணி ஆற்றினார். ஒரு நாள் ஆண்டவரின் திருக்கோவிலின் தூப பீடத்தில் தூபம் காட்டினார். ''உம் மனைவி எலிசபெத்து ஒரு மகனைப் பெற்றெடுப்பார்'' என காபிரியேல் தூதர் செக்கரியாவுக்கு அறிவித்தார். அவர்கள் வயதானவர்களாய் இருந்தபடியால் அதனை நம்புவதற்குத் தயங்கினார். குழந்தை பிறக்கும் வரை செக்கரியா பேச முடியாமல் இருந்தார். குழந்தையை வளர்க்கும் முறை குறித்து வானதூதர் அவருக்கு அறிவுரை வழங்கினார். வானதூதர் அறிவித்தபடி எலிசபெத்துக்கு ஒரு மகன் பிறந்தார்.

குழந்தை பிறந்து எட்டாம் நாள் யூத பாரம்பரிய வழக்கப்படி விருத்த சேதனம் செய்யும் நாள் வந்தது.

**முதலாம் அயலவர்** : கடவுளுக்கு மகிமை உண்டாவதாக... ஆண்டவர் எலிசபெத்துக்கு மகனைக் கொடுத்தார். மிகவும் சந்தோசம்.

**முதலாம் உறவினர்** : ஆம். அது உண்மை... கடவுள் அவளை அதிகம் நேசித்தார். இவ்வளவு காலமாக பிள்ளைகள் இல்லாதிருந்தனர். வயது சென்ற காலத்தில் எலிசபெத்துக்கு கடவுள் பிள்ளையைக் கொடுத்தார்.

**இரண்டாம் அயலவர்** : எலிசபெத்து, குழந்தையைக் கொண்டு வாருங்கள். விருத்தசேதனம் செய்வதற்கு ஆயத்தம் செய்வோம்.

(குழந்தைக்குப் பெயர் வைக்க அனைவரும் ஆயத்தமாகுதல்)

**இரண்டாம் உறவினர்** : தந்தையின் பெயர் செக்கரியா என்பதால் குழந்தைக்கு 'செக்கரியா' எனப் பெயரிடுவோம்.

**அயலவரும் உறவினரும்** : ஆம்... ஆம்... அது நல்லது.

**எலிசபெத்து** : ம்... (எலிசபெத்து சிறிது சிந்தித்தல்) வேண்டாம் ''யோவான்'' எனப் பெயரிடுவோம்.

**மூன்றாம் உறவினர்** : (அயலவர் மற்றும் உறவினர்களைச் சுற்றிப் பார்த்தல்) உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே.

**நான்காம் உறவினர்** : செக்கரியா குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உமது விருப்பம் என்ன?

செக்கரியாவிடம் சைகை மூலமாக குழந்தையின் பெயரைக் குறித்துக் கேட்டார்கள். அவர் எழுது பலகை ஒன்றைக் கேட்டு வாங்கினார். குழந்தையின் பெயர் யோவான் என்று எழுதினார். (உறவினர் எல்லாரும் வியப்படைந்தனர்.) அத்துடன் செக்கரியா மீண்டும் கதைக்கும் ஆற்றலையும் பெற்றார்.



உரு 8.1 செக்கரியா எழுது பலகையில் குழந்தையின் பெயரை எழுதுதல்

**செக்கரியா** : கடவுளுக்கு நன்றி. எனக்கு மீண்டும் பேசும் ஆற்றல் கிடைத்தது.

வயது முதிர்ந்த காலத்தில் எலிசபெத்துக்குக் குழந்தை கிடைத்தது. செக்கரியா குழந்தைக்கு 'யோவான்' எனப் பெயரிட்டு கடவுளின் கட்டளைக்குக் கீழ்படிந்தான். அதனால் அவனுக்கு மீண்டும் பேசும் ஆற்றல் கிடைத்தது. கடவுள் பயத்துடன் கடவுளுக்குக் கீழ்படிந்தமையால் எலிசபெத்தும் செக்கரியாவும் வாழ்வில் நன்மதிப்பைப் பெற்றார்கள்.

**இறைகட்டளைக்குக் கீழ்ப்படிவோம்!**
**வாழ்வில் நன்மதிப்பைப் பெறுவோம்!**



**விண்ணப்பம்**

***அன்பான தந்தையே, எனது வாழ்வில் நீர் அருளிய ஆசிகளுக்கு உமக்கு நன்றி. இறை கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் நல்வாழ்வு வாழ்வதற்கும் எனக்கு உம் அருள் தந்தருளும்.***

***ஆமென்.***



## செயற்பாடு

இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை அடைப் புக்குறியிலிருந்து தெரிவுசெய்து எழுதுங்கள்.

(யோவான், வயது, எட்டாம் நாள், காபிரியேல் வானதூதர், கடவுள் பயத்துடன்)

i. எலிசபெத்தும் செக்கரியாவும் ................ சென்றவர்கள்

ii. எலிசபெத்து ஒரு குமாரனைப் பெறுவாள் என்ற செய்தியை செக்கரியாவுக்கு ..................... அறிவித்தார்.

iii. குழந்தை பிறந்து ........................ விருத்தசேதனம் செய்ய ஆயத்தம் செய்தனர்.

iv. செக்கரியா எழுது பலகையில் குழந்தையின் பெயர் ........................ என்று எழுதினார்.

v. எலிசபெத்தும் செக்கரியாவும் .................. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர்.

# 9 இறை உறவை வளர்ப்போம்

நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் ஆவோம். அதனால் கடவுளுக்கும் எமக்கும் இடையே நிலையான உறவு இருக்க வேண்டும். கடவுளுக்கும் எமக்கும் இடையே தொடர்பு வைப்பதற்கான சிறந்த முறை விண்ணப்பம் செய்தல் ஆகும்.

**விண்ணப்பத்தில் காணப்பட வேண்டிய அம்சங்கள்:**



- துதித்தல்
- நன்றி செலுத்துதல்
- மன்னிப்பு கேட்டல்
- பிறருக்காக மன்றாடுதல்
- தமக்காக மன்றாடுதல்

**துதித்தல் (திருத்தூதர்பணிகள் 16:25)**

கடவுளைத் துதித்தலுடன் விண்ணப்பத்தை ஆரம்பிக்க வேண்டும். அவர் துதிகளின் மத்தியில் வாசம் செய்கிறார். பாடல்கள் பாடி கடவுளைத் துதிக்க முடியும். துதியின் மூலமாக கடவுளின் பண்பு களைப் பாடலாம். திருத்தூதர்பணிகள் 16:25 பவுலும் சீலாவும் சிறையில் இருந்த வண்ணம் விண்ணப்பம் செய்து பாடினார்கள் என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

## நன்றி செலுத்துதல் (கொலோசையர் 1:3)

நாம் கடவுளிடம் விண்ணப்பம் செய்யும்போது நன்றியுள்ள உள்ளத்துடன் துதி செலுத்த வேண்டும். எமக்குக் கடவுள் அருளிய ஆசிகள் அனைத்துக்கும் நன்றி கூற வேண்டும். சிறப்பாக கடவுளின் ஒரே மகன் இயேசுவை இந்த உலகத்துக்கு அனுப்பியமைக்காக நன்றி செலுத்த வேண்டும். அவர் எமது தேவைகளை அறிவார். நாம் இறைவனிடம் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

## மன்னிப்புக் கேட்டல் (திருப்பாடல்கள் 51:1-2)

நாள் தோறும் நாம் அறிந்தும் அறியாமலும் தவறுகள் செய்கின்றோம். இவை கடவுளுக்கு எதிராகவும் எமது சகோதர சகோதரிகளுக்கு எதிராகவும் செய்யும் தவறுகள் ஆகும். எமது தவறுகளுக்காக கடவுளின் முன்னிலையில் மனம் வருந்தி மன்னிப்புப் பெற வேண்டும். அதேபோன்று மீண்டும் அவற்றைச் செய்யாதிருக்க வேண்டும். தாவீது ஒரு அரசனாக இருந்தும் தனது தவறுகளை உணர்ந்து மனம் வருந்தி கடவுளிடம் மன்னிப்பு வேண்டினார்.

## பிறருக்காக மன்றாடுதல் (திருத்தூதர் பணிகள் 13:3)

நாம் பிறருக்காக வேண்டுதல் செய்தல் முக்கியமானது ஆகும். எமது உறவினர், நண்பர்களின் தேவைகளுக்காக வேண்டுதல் செய்ய வேண்டும். நாம் அறியாதவர், உலக நாடுகளில் துன்பங்களின் மத்தியில் வாழ்பவர், நோயாளர், வறுமையில் வாழ்பவர்களுக்காக விண்ணப்பம் செய்ய வேண்டும்.

## தமக்காக மன்றாடுதல் (திருத்தூதர் பணிகள் 10:1- 4)

இறுதியாக எமது தேவைகளுக்காக இறைவனிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். நாள்தோறும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நோய், துன்பங்கள் போன்றவற்றுக்காக நாம் வேண்டுதல் செய்ய வேண்டும்.

இறை பிள்ளைகளாகிய எமக்குத் தேவையானவற்றை கடவுள் பொருத்தமான முறையில் தருவார். கிறிஸ்தவ பிள்ளை என்ற வகையில் வாழ்வுக்கு மன்றாடல் அவசியம். நாம் மன்றாடல் மூலமாக கடவுளுடன் தொடர்பு கொள்கின்றோம்.

நாம் கடவுளுடன் இடைவிடாது விண்ணப்பம் செய்வோம். கடவுளுடனான உறவை வளர்த்துக் கொள்ளுவோம்.


**மனன வாக்கியம்**

***என்னிடம் மன்றாடு; உனக்கு நான் செவிசாய்ப்பேன். நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறை பொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்.***

*எரேமியா 33:3*

### செயற்பாடு

1. பின்வரும் உருவத்தைப் பயிற்சிப் புத்தகத்தில் வரைந்து விண்ணப்பத்தில் உள்ளடக்கப்படும் அம்சங்களைப் பெயரிடுக.



2. மேற்படி அம்சங்கள் காணப்படும் சிறு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

# 10 குணமளிக்கும் இயேசு

## லூக்கா 6: 6 - 11

**அப்பா** : இன்று ஓய்வுநாள் பாடசாலையில் என்ன கற்றீர்கள்?

**அண்ணா** : இன்று நாம் ஓய்வுநாள் பாடசாலையில் அழகான பாடம் ஒன்றைக் கற்றோம்.

**தங்கை** : அது என்ன?

**அண்ணா** : இயேசு ஓய்வுநாளில் செய்த சிறப்பான செயலைக் கற்றோம்.

**தங்கை** : அது என்ன?

**அண்ணா** : இயேசு வாழ்ந்த காலத்தில் மக்கள் ஓய்வுநாளில் தொழுகைக் கூடம் சென்றனர். அங்கே போதனைகளைக் கேட்டனர்.

**தங்கை** : நாங்கள் ஆலயம் சென்று வேத வசனங்களையும் அருளுரைகளையும் கேட்பது போன்றதல்லவா?

**அண்ணா** : ஆம். ஒருநாள் இயேசு ஓய்வுநாளன்று தொழுகைக் கூடம் சென்று போதனை செய்தார். வலதுகை சூம்பிய ஒருவர் அங்கு இருந்தார்.

**தங்கை** : இயேசு அந்த நோயாளரைக் காணவில்லையா?


**அண்ணா** : கண்டார். அங்கு மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவிடம் குற்றம் காணும் நோக்குடன் அங்கு இருந்தனர். ஓய்வுநாளில் அவரைக் குணப்படுத்துவாரா என்றும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தங்கை : இயேசு அந்த நோயாளரைக் குணப்படுத்தினாரா?

அண்ணா : இயேசு பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர்களின் எண்ணத்தை அறிந்து கொண்டார். கை சூம்பியவரை நோக்கி "எழுந்து நடுவே நில்லும்" என்று கூறினார்.

தங்கை : அதன் பின்னர்...?

அண்ணா : இயேசு "உமது கையை நீட்டும்" என்றார். அவரும் அப்படியே செய்தார். அவருடைய கை நலமடைந்தது.



உரு 10.1 இயேசு வலது கைசூம்பியவரை குணப்படுத்தல்

தங்கை : புதுமை! இயேசு நோயாளரைக் குணப்படுத்திய விதம்! புதுமை!

அம்மா : நல்லது மகனே, மகளே. நான் சமையல் அறையில் இருந்த வண்ணம் உங்கள் இருவரின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நல்ல பிள்ளைகள் ஓய்வுநாளில் கற்றவைகளைக் குடும்பத்தவர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

அப்பா : ஆம் பிள்ளைகளே. அது மிகவும் நல்லது! தெரியாதவர்களும் அறிந்து கொள்வார்கள். தெரிந்த எமக்கும் மீண்டும் நினைவுக்கு வரும்.

**அம்மா** : இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பல நோயாளர் களைக் குணப்படுத்தினார். அவர் இன்றும் எம் மத்தியில் வாழும் பலருக்குக் குணமளிக்கின்றார்.

**அண்ணா** : ஏன்? எனது வகுப்பு ஆனந்தனுக்கு சுகம் கிடைத்தது.

**தங்கை** : அது மட்டுமா? எமது சஜீவனி மாமிக்கு பூரண சுகம் கிடைத்தது.

**அப்பா** : இயேசு இன்றும் நோயாளரை குணமாக்குகின்றார்.

**அம்மா** : சரி, பகல் உணவை மேசையில் எடுத்து வைப்போமா?

**அப்பா** : நானும் உதவி செய்கிறேன்.


**அண்ணாவும்/ தங்கையும்** : நாங்கள் மேசையை ஆயத்தம் செய்கிறோம். விண்ணப்பம் செய்ய ஆயத்தமாக இருப்போம்.

## எனது எல்லா நோய்களையும் இயேசு குணமாக்குவார்!



### விண்ணப்பம்

***அன்பான இயேசுவே,***
***நீர் இந்த உலகில் வாழும் காலத்தில் நோயாளரைக் குணப்படுத்தியது போன்று இன்று எமது நோய்களைக் குணப்படுத்தியருளும்.***
***ஆமென்.***



### செயற்பாடு

1. இயேசு நோயாளரைக் குணப்படுத்திய சம்பவங் களைத் திருவிவிலியத்தில் இருந்து தகவல்களைச் சேகரித்து சிறு புத்தகம் ஒன்று தயாரியுங்கள்.

2. இயேசு உங்களுக்கு அல்லது நீர் தெரிந்த ஒருவருக்கு குணமளித்த முறையை விபரித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

# 11 இயேசு பாவிகளை ஏற்றுக்கொள்கின்றார்

**லூக்கா 7: 36 - 50**




உரு 11.1 சீமோன் வீட்டுக்கு இயேசு வருதல்

ஒருநாள் இயேசு சீமோன் எனும் பரிசேயன் ஒருவருடைய அழைப்பை ஏற்று அவருடைய வீட்டுக்கு உணவருந்தச் சென்றார்.

அந் நாளில் பாவியான பெண் ஒருவர் இருந்தார். அவள் இதனை அறிந்து நறுமண தைலம் கொண்ட படிகச் சிமிழைக் கொண்டு வந்தார்.




உரு 11.2 இயேசுவைக் காண பாவியான பெண் வருதல்



உரு 11.3 இயேசுவின் கால்களை துடைத்தல்


இயேசுவுக்குப் பின்னால் கால் மாட்டில் அமர்ந்து அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து தம் கூந்தலால் துடைத்து நறுமணத் தைலம் பூசினாள். அவரை அழைத்த சீமோன் எனப்படும் பரிசேயர், ‘‘இவர் ஓர் இறைவாக்கினர் என்றால் தம்மைத் தொடுகிற இவள் யார் என்று அறிந்திருப்பார்! இவள் பாவியாயிற்றே’’ என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்.



உரு 11.4 இயேசு சீமோனுடன் கதைத்தல்

அப்பொழுது இயேசு சீமோனைப் பார்த்து பின்வருமாறு கூறினார். ''கடன் கொடுப்பவர் ஒருவரிடம் ஒருவர் ஐநூறு தெனாரியமும் மற்றவர் ஐம்பது தெனாரியமும் கடன்பட்டிருந்தனர். கடன் தீர்க்க அவர்களால் முடியாமற் போகவே இருவர் கடனையும் அவர் தள்ளுபடி செய்து விட்டார்.'' இவர்களுள் யார் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துவார்? என்று சீமோனிடம் வினவினார். சீமோன் மறுமொழியாக அதிகம் கடன் பெற்றவர்! என்றார்.

இயேசு மீண்டும் சீமோனிடம் ''இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்கு வந்த போது நீர் என் காலடிகளைக் கழுவத் தண்ணீர் தரவில்லை. இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தம் கூந்தலால் துடைத்தார். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை. இவரோ என் காலடிகளை முத்தமிட்டாள். இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்'' என்றார்.




உரு 11.5 பெண் பாவமன்னிப்பு பெற்ற முறையை சீமோனிடம் கூறுதல்



உரு 11.6 இயேசு பாவியான
பெண்ணுடன் கதைத்தல்

பின்பு பெண்ணைப் பார்த்து ''உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' என்றார். பாவங்களை மன்னிக்கும் இவர் யார்? என்று பந்தியில் அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள். ''உமது நம்பிக்கை உம்மை மீட்டது. அமைதியுடன் செல்க'' என்று இயேசு அப்பெண்ணிடம் கூறினார்.

**நாம் இயேசுவைப் போன்று எல்லோரையும் ஏற்றுக் கொள்வோம்!**



**மனன வாக்கியம்**

***பின்பு அப்பெண்ணைப் பார்த்து "உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். (லூக்கா 7 : 48)***



## செயற்பாடு

அடைப்புக்குறியில் காணப்படும் சொற்களைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புங்கள்.

(இருவர், பாவியான, நறுமண தைலம், அன்பால், சீமோன், கண்ணீரால்)

i. இயேசு ....................... எனும் பரிசேயரின் வீட்டுக்கு வந்தார்.

ii. நறுமண தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் வந்தவர் ......................... பெண் ஆவர்.

iii. அவர் இயேசுவின் காலடிகளைக் ..................... நனைத்து ........................... பூசினாள்.

iv. கடன் கொடுப்பவர் ஒருவரிடம் ........................ கடன் பட்டிருந்தனர்.

v. அவள் காட்டிய ...................... அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

# 12 பகைவரை நேசிப்போம்

**லூக்கா 22 :47 - 53**

**ஆசிரியர்** : இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்னர் பகைவரிடம் காட்டிக் கொடுக்கப்பட்ட நிகழ்வை நாம் இன்று நடித்துக் காட்டுவோம்.

(ஆசிரியர் மாணவர்களுக்குக் கதையின் வெவ்வேறு கதாபாத் திரங்களைப் பகிர்ந்தளித்து நடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கல்)

**நாடகம்**

இயேசு விண்ணப்பம் செய்து எழுந்து சீடர்களுடன் உரையாடுதல்.

யூதாஸ் காரியோத்து மக்கள் கூட்டத்துடன் இயேசுவின் முன்னால் வந்து இயேசுவை முத்தமிடுதல்.

(இயேசு யூதாசை நோக்கிப் பார்த்தல்.)

**இயேசு** : யூதாசே, முத்தமிடுவதன் மூலமாகவா மானிட மகனைக் காட்டிக் கொடுக்கப் போகிறாய்?
(கோபமடைந்த ஒருவர் யூதாசுடன் இருந்த ஒருவரின் வலதுகாதை துண்டித்தல்.)

**இயேசு** : ''விடுங்கள்''
(இயேசு அவருடைய காதைத்தொட்டு நலமாக்குதல்.)

**இயேசு** : ''ஒரு கள்வனைப் பிடிக்க வருவது போல நீங்கள் வந்தது ஏன்? நான் நாள்தோறும் கோவிலில் உங்களோடு

இருந்தும் நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை. ஆனால் இது உங்களுடைய நேரம் இப்போது இருள் அதிகாரம் செலுத்துகிறது.''

(யூதாசுடன் வந்தவர்கள் இயேசுவைப் பிடித்துக் கைது செய்து இழுத்துச் செல்லுதல். சீடர்கள் பயந்து எதுவும் செய்ய முடியாது பார்த்துக் கொண்டிருத்தல்.)

(நடித்தல் முடிவு பெறல்)

இயேசு தம்மை பகைத்தவர்களிடம் பகைமை காட்டவில்லை. தனது சீடர் ஒருவர் பகைவரின் காதை வெட்டியபோது அதைக் குணப் படுத்தி பகைவருக்கு அன்பையும் இரக்கத்தையும் வெளிக்காட்டினார். இயேசுவைப் பின்பற்றி வாழும் நாம் பகைவரை நேசிக்க வேண்டும் என்பது அவரது விருப்பம் ஆகும்.

பகைவரை நேசித்த இயேசுவைப் பின்பற்றி நாமும் பகைவரிடம் அன்புடன் செயற்படுவோம்!



**விண்ணப்பம்**

***அன்பான இயேசுவே,***
***சமுதாயத்தில் எமக்கு எதிராகச் செயற்படுபவர்களுடன் பொறுமையுடனும் அன்புடனும் செயற்பட எமக்கு வரம் தந்தருளும்.***

***ஆமென்.***

## செயற்பாடு

1. நீர் கற்ற பாடத்தின் துணையுடன் பின்வரும் உருவப் படங்களுக்குப் பொருத்தமான நிகழ்வை உமது வசன நடையில் எழுதுக.

1. 

..................................................

..................................................

..................................................

2. 

..................................................

..................................................

..................................................

3. 

..................................................

..................................................

..................................................

2. குறிப்பேடு ஒன்றை நீங்கள் தயாரித்து நாள்தோறும் வாழ்வில் நீர் பிறருக்கு மன்னிப்பு வழங்கும் சந்தர்ப்பம், 5 ஐயும் பொருத்தமான திகதியையும் குறிப்பிடுங்கள்.

# 13 பேதமின்றி அனைவரையும் ஏற்றுக் கொள்வோம்

## யோவான் 4:7-10, 27, 29 - 30

இயேசு வாழ்ந்த காலத்தில் யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. யூத சமூகத்தினர் சமாரிய இனத்தவரை ஒதுக்கி வைத்திருந்தனர்.



உரு 13.1 சமாரியப் பெண்ணும் இயேசுவும்

இயேசு ஒருநாள் சமாரியா வழியாகப் பயணம் செய்து கொண்டிருந்தார். சிக்கார் என்னும் ஊருக்கு வந்தபோது பயணத்தால் களைப்புற்றிருந்த அவர் அங்கே இருந்த கிணற்று ஓரமாய் அமர்ந்தார். அவருடைய சீடர்கள் உணவு வாங்குவதற்காக நகருக்குள் சென்றிருந்தனர். அவ்வேளையில் சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் எடுப்பதற்காக அங்கே வந்தார்.

இயேசு அவளிடம், 'குடிப்பதற்கு எனக்கு தண்ணீர் கொடும்' என்று கேட்டார். யூதராகிய இயேசு சமாரியப் பெண்ணான தன்னிடம்

தண்ணீர் கேட்பது பற்றி வியப்புற்று பின்வருமாறு வினவினார் ''நீர் யூதர் நானோ சமாரியப் பெண் நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?'' எனக் கேட்டார். அதற்குப் பதிலாக இயேசு அவளைப் பார்த்து ''குடிப்பதற்கு தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதை நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர்! அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்'' என்றார்.


அந்நேரத்தில் இயேசுவின் சீடர்கள் திரும்பி அவ்விடம் வந்தனர். அங்கே இயேசு பெண் ஒருவரிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றனர். ஏனெனில் சமாரிய இனத்தவரைப் போல பெண்களும் அக்கால சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட பிரிவினராவர்.

இயேசுவோடு பேசிய அப்பெண் அவரைப் பற்றிய செய்தியை ஊருக்குள் சென்று மக்களிடம் அறிவித்தார். தன்னைப் பற்றிய எல்லாவற்றையும் கூறியவர் கிறிஸ்துவாக இருப்பாரோ என்றார். இதைக் கேட்ட மக்கள் அனைவரும் ஊரிலிருந்து புறப்பட்டு வந்து இயேசுவைச் சந்தித்து அவரை அறிந்து கொண்டார்கள். இயேசு அன்று மக்கள் மத்தியில் இருந்த இன, மத, பேதங்களைக் கடந்து அனைவரோடும் இணைந்து செயற்பட்டார் என்பது இதன் மூலம் எமக்கு விளங்குகின்றது.



உரு 13.2 சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் காணப்படும் பிள்ளைகள்

## நாம் பேதமின்றி அனைவரையும் ஏற்றுக் கொள்வோம்!



***மனன வாக்கியம்***

***இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லோரோடும் அமைதியுடன் வாழுங்கள். (உரோமையர் 12:18)***



## செயற்பாடு

1. இயேசுவும், சமாரியப் பெண்ணினதும் சந்திப்பை உரையாடலாக எழுதுங்கள்.

# 14 எல்லையில்லாத மன்னிப்பு

## மத்தேயு 18:21- 35

இயேசுவின் பிரதான சீடனான பேதுரு ஒருநாள், இயேசுவிடம் வந்து கேள்வி ஒன்றைக் கேட்டார். அதாவது ''என் சகோதரர் எனக்கு எதிராக பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும். ஏழுமுறை மட்டுமா?'' என்றார். அதற்கு இயேசு ''ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை'' என அவரிடம் பதில் கூறினார். இதன் மூலமாக இயேசு எமக்கு வெளிப்படுத்துவது, நாம் பிறரை மன்னிக்கும்போது எல்லையில்லாமல் மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதேயாகும்.

இயேசு மேலும் மன்னிப்பளிப்பதைப் பற்றித் தெளிவுபடுத்துவதற்காக உவமைக் கதை ஒன்றைக் கூறினார். அவ்வுவமை கவிநயத்தோடு முன்வைக்கப்பட்டுள்ளது.



உரு 14.1 மன்னிப்பு வழங்காத மனிதரை அரசனிடம் அழைத்து வருதல்

1. வளங்கள் பல நிறைந்த அரசரிடம் - ஓர்நாள்
அழுது புலம்பும் ஒருவரை அழைத்து - வந்தனர் அவரிடம்
பலகோடி கடன்பட்டிருந்த - அம்மனிதன்
எப்படி இக்கடனைத் தீர்ப்பேன் என்பது - தெரியவில்லை

2. மனைவி மக்கள் உடைமைகள் - அனைத்தையும்
விற்று கடனடைக்க ஆணையிட்டார் - அவ்வரசன்
அவர் காலில் விழுந்து பணிந்து மன்றாடி - சில காலம்
பொறுத்தருள்க திருப்பித் தருகிறேன் - யாவையுமென்றான்

3. அழுது புலம்பும் மனிதனின் வேதனையறிந்த - அவ்வரசன்
மன்னிப்பளித்தார் அம் மனிதனுக்கு - இரக்க மனதுடன்
முழுக் கடனையும் தள்ளுபடி செய்து - விடுவித்தார்
விடுதலை பெற்று சென்றானவன் - மனமகிழ்வுடன்

4. மகிழ்ந்து பூரிப்போடு வெளியில் சென்ற - இம்மனிதன்
கண்டான் இன்னுமோர் மனிதனை - அவ்வழியில்
முன் ஒருநாள் சிறுதொகை கடன்பட்ட - அம்மனிதனிடம்
கடன் கேட்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது - என எண்ணினான்

5. கடன்பட்டவர் பொறுத்துத் தருகிறேன் - எனக் கேட்க
மன்னிக்கவும் இல்லை பொறுக்கவுமில்லை - அம்மனிதனை
துன்பங்கள் பல செய்து சிறையிலடைத்தான் - இம்மனிதனை
இதையறிந்த மனிதர் இதைக் கூறினர் - அரசனிடம்

6. அழைத்து வரும்படி கூறி விசாரித்தார் - அம்மனிதனிடம்
நான் உனக்களித்தேன் மாபெரும் - மன்னிப்பு
நீ ஏன் மறுத்தாய் அச்சிறு கடனை - மன்னிப்பதற்கு
சினங் கொண்ட அரசன் சிறையிலடைத்தான் - அம் மனிதனை

**இயேசுவைப் போல் நாமும் பிறரை எல்லையின்றி மன்னிப்போம்!**



***விண்ணப்பம்***

***அன்பு நிறைந்த இறைவா, நான் செய்த தவறுகளை மன்னியுங்கள். அவ்வாறு பிறர் எமக்குச் செய்யும் தவறுகளை நாங்கள் மன்னிப்பதற்கு எமக்கு வழிகாட்டுங்கள். ஆமென்.***



## செயற்பாடு

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பேதுரு இயேசுவிடம் கேட்ட கேள்வி என்ன?
2. அக் கேள்விக்கு இயேசு அளித்த பதில் என்ன?
3. மன்னிப்பளிப்பதைப் பற்றி இயேசுவின் போதனையை சுருக்கமாக விளக்குக.

# 15 பரிவு காட்டிய இயேசு

## லூக்கா 7: 11-17

ஒருநாள் இயேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும் பெருந்திரளான மக்களும் அவருடன் இருந்தனர். அவர் நயீன் ஊர் வாயிலை நெருங்கி வந்தபோது அங்கே சிலர் இறந்த ஒருவரைப் பாடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு வந்ததைக் கண்டார். இறந்தவர், தாய்க்கு ஒரே மகன், அத்தாயோ கணவனை இழந்த கைம்பெண்ணாவார்.




உரு 15.1 நயீன் ஊர் கைம்பெண்ணின் மகனை உயிருடன் எழுப்புதல்

அந்தத் தாய்க்கு இருந்த ஒரே மகனும் இறந்துபோனதால், இயேசு அவர் மீது பரிவு கொண்டார். அந்தத் தாயோ அழுது கொண்டிருந்தார், அநேக மக்கள் அவரை ஆறுதல்படுத்தினர். இயேசுவும் அவரை அழாதீர் எனக் கூறி பாடையின் அருகில் சென்று அதைத் தொட்டு ‘‘இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திடு’’ என்றார்.

அப்போது இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இயேசு அவரை அவர் தாயிடம் ஒப்படைத்தார். இவ்வாறாக இயேசு இளைஞனை மரணத்தில் இருந்து உயிரோடு எழுப்பினார்.

இதைக் கண்ட மக்கள் வியப்புற்றனர். அவர்கள் கடவுள் தம் மக்களை விடுவிப்பதற்காக வந்திருக்கிறார் என்று சொல்லிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**தாயின் துன்பத்தை அறிந்து கொண்ட இயேசுவிடம் காணப்பட்ட இரக்க குணத்தை நாமும் பின்பற்றுவோம்!**



***மனன வாக்கியம்***

***இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத்தேயு 5:7)***



## செயற்பாடு


1. இயேசு இறந்த இளைஞனை உயிர்பெறச் செய்த ஊர் எது ?
2. அந்த ஊரின் வாயிலை அடைந்தபோது அவர்கள் கண்டது என்ன ?
3. இயேசு யாரிடம் இரக்கமும் பரிவும் காட்டினார் ?
4. இயேசு எவ்வாறு பரிவு காட்டினார் ?
5. இக் கதையின் மூலமாக நாம் கற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் குறிப்பிடுக.

# 16 பொறுமையோடு செயற்படுவோம்

## லூக்கா 9: 51-56

பொறுமையும் இரக்கமும்...
அன்பின் தன்மையும் இதுவாகும்,
விரோதம்... பகை... கோபம் இல்லாதபோது
அன்பு அவ்விடம் நிலவும்

பொறுமையைப் பற்றி நாம் முன்னைய வகுப்பில் கற்றுக் கொண்டுள்ளோம். தூய ஆவியின் கனிகளின் குணாதிசயங்களில் பொறுமையும் ஒன்றாகும். இயேசு பொறுமையோடு செயற்பட்ட ஒரு சம்பவத்தை இன்று நாம் பார்ப்போம்.



உரு 16.1 யாக்கோபு மற்றும் யோவானின் வேண்டுகோளை இயேசு எதிர்த்தல்

ஒருநாள் இயேசு எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்து, தமக்கு முன்னாக சீடர்களை அனுப்பினார். அவர்கள் அவருக்குத் தேவையானவற்றை ஏற்பாடு செய்வதற்காக சமாரியருடைய ஊருக்குப் போனார்கள். அக்காலத்தில் சமாரியருக்கும் யூதர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே சமாரியாவில் வாழ்ந்த மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு விரும்பவில்லை.

இயேசுவின் சீடராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது பொறுமையின்றி கடும் கோபம் கொண்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் அவ்வூர் மக்களை அழிப்பதற்காக ''வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா''? இது உமக்கு விருப்பமா? என்று இயேசுவின் விருப்பத்தைக் கேட்டனர். அதற்கு இயேசு இடமளிக்கவில்லை.

இயேசு சமாரியர் செய்த செயல்களுக்காக கோபம் கொள்ளாது பொறுமையோடு செயற்பட்டார். அவர் சீடர்களின் பொறுமையற்ற தன்மையைக் குறித்து அவர்களைக் கடிந்து கொண்டார்.

எமக்கும் பாடசாலையிலோ, வீட்டிலோ, சமூகத்திலோ இவ்வாறு கோபம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம். இருப்பினும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் இயேசுவிடம் காணப்பட்ட பொறு மையின் குணத்தை எமக்குள் வளர்த்துக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்காக இறை தந்தையிடம் வேண்டி இறை தயவைப் பெற்றுக் கொள்வோம்.

**இயேசுவைப் பின்பற்றும் நாம் கோபம் கொள்ளாது பொறுமையோடு செயற்படும் பிள்ளைகளாவோம்!**



**விண்ணப்பம்**

*அன்பின் இயேசுவே, உம்மைப்போல் பொறுமையோடு செயற்படும் பிள்ளையாவதற்கு எனக்கு இரக்கம் செய்யுங்கள். ஆமென்*



## செயற்பாடு

கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்கள் காண்பிக்கும் மாறுத்தரங்களை எழுதுங்கள்.

1. பிறர் உங்கள் மனதை நோகச் செய்யும்போது :
2. பிறர் உங்களை ஏளனம் செய்யும்போது :
3. பிறர் உங்களின் உடைமைகளைப் பறிக்கும்போது :
4. பிறர் உங்களை விளையாட்டில் சேர்க்காது ஒதுக்கும்போது :
5. நீங்கள் செய்யாத ஒரு தவறைச் செய்ததாக கூறும்போது :

# 17 சிறுவருக்கு அன்பு செலுத்துதல்

## மாற்கு 10: 13-16

யூத சமுதாயத்தில் சிறு பிள்ளைகளுக்கு முக்கிய இடம் வழங்கப் படவில்லை. ஆனாலும் இயேசு சிறுவர்களை அளவில்லாமல் அன்பு செய்தார். அவ்வாறு அவர் சிறுவர்களை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தை கீழே தரப்பட்ட நிகழ்வினூடாகப் பார்ப்போம்.

ஒருநாள் பெற்றோர், தமது பிள்ளைகள் மீது இயேசு தம் கையை வைத்து ஆசி வழங்க வேண்டும் என்பதற்காக அவரிடம் கொண்டு வந்தனர். அப்போது




சிறு பிள்ளைகளோடு வந்த பெற்றோரை, சீடர்கள் தம்மிடம் வருவதற்கு இடம் கொடுக்காததைக் கண்ட இயேசு சீடர்களின் செயலை விரும்பாமல், சிறுவர்களைத் தம்மிடம் அழைத்து பின்வருமாறு கூறினார்.



‘‘சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளைபோல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்’’ என்றார்.

இயேசு தம்மிடம் வந்த சிறுபிள்ளைகளை அரவணைத்து தம் கைகளை அவர்கள் மீது வைத்து ஆசி வழங்கினார். இவ்வாறு இயேசு சிறுபிள்ளைகளை அதிகமாக நேசித்து அன்பு செய்தார்.

இன்று சமுதாயத்தில் சிறு பிள்ளைகளுக்கு பலவிதமான துன்பங்கள் ஏற்படுவதை நாம் அறிகிறோம். இருப்பினும் இன்று சிறுவர்களின் பாதுகாப்பிற்காக ‘‘சிறுவர் பாதுகாப்பு பிரகடனம்’’ நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக சிறுவர்களைப் பாதுகாப்பதும் அன்பாகப் பராமரிப்பதும் செயற்படுத்தப்படுகின்றது. அன்று இயேசு சிறுவர்களிடம் கொண்டிருந்த அன்பு இன்றும் சமூகத்தில் நிலவுகின்றது. இவ்வாறு இயேசு சிறுவர்கள் பெறுமதிமிக்கவர்கள் என்பதையும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையும் காண்பித்து சிறுவர்களை நேசித்து ஏற்றுக் கொண்டார்.

**நீங்கள் பெறுமதிமிக்கவர்கள் என்பதை இறை தந்தை அறிந்திருக்கிறார் அவர் உங்களை அன்பு செய்வாராக!**

***மனன வாக்கியம்***

*சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. (மாற்கு 10:14)*

## செயற்பாடு

1. இயேசு உங்களை நேசிப்பதால் அவருக்கு நன்றி செலுத்தி விண்ணப்பம் எழுதுக.

# 18 தூய ஆவியானவரை அறிந்து கொள்வோம்

## திருத்தூதர் பணிகள் 2:1-4

தூய ஆவியின் வருகை

இயேசு விண்ணேற்றமடையும் முன் தம் சீடர்களுக்கு வாக்குறுதி ஒன்றை அளித்தார். அதாவது, தூய ஆவியானவரின் வருகையைக் குறித்தும், தூய ஆவியின் வல்லமையால் மக்கள் பெலனடைந்து தமக்கு சான்று பகர்வார்கள் என்பதைக் குறித்தும் அவ்வாக்குறுதி அமைந்திருந்தது.

இயேசு அவர்களுக்குக் கூறியபடி திருத்தூதர்கள் அன்று எருசலேமில் மேல்மாடியில் தங்கியிருந்து இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அன்றைய நாள் யூதர்களின் விசேட தினமான பெந்தக்கோஸ்து என்னும் அறுவடை விழாவாக இருந்தது. இதற்காக பல பிரதேசங்களில் இருந்து வந்த திரளான யூதர்கள் எருசலேம் நகரில் கூடியிருந்தனர்.



உரு 18.1 தூய ஆவியின் வருகை


பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியானவர் ஆரம்பத் திருச்சபையில் வந்திறங்கிய நிகழ்வைப் பார்ப்போம்.

திருத்தூதர் பணிகள் 2:1-4 வரை கற்று தூய ஆவியின் வருகைக்குப் பொருத்தமாக கீழே தரப்பட்ட நிகழ்வுகளை முறையாக ஒழுங் கமைத்து இலக்கமிடவும் (இச் செயற்பாட்டைப் பயிற்சிப் புத்தகத்தில் குறிப்பிடுக.)

| நிகழ்வு | இலக்கம் |
| --- | --- |
| ■ நெருப்புப் போன்று பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்வதை அவர்கள் கண்டார்கள். | ........................... |
| ■ பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். | ........................... |
| ■ அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர் தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். | ........................... |
| ■ திடீரென்று கடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகியது. | ........................... |
| ■ அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. | ........................... |

மேலே குறிப்பிடப்பட்டது போல் தூய ஆவியின் வருகையை ஆரம்பத் திருச்சபையின் மூலமாக அறியலாம்.

தூய ஆவியின் வல்லமையின் அனுபவத்தைப் பெற்ற ஆரம்பக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் காணப்பட்ட குணாதிசயங்களைக் கீழே காணலாம்.




இயேசுவின் சிலுவை மரணத்தின் பின் பயந்து ஒளிந்து கொண்டிருந்த திருத்தூதர்கள் பயமின்றி மக்கள் மத்தியில் துணிவுடன் இயேசு வுக்குச் சான்று பகர்ந்தனர். இந்த நிகழ்வானது கிறிஸ்தவ சபையின் பிறப்பாகும்.

இவ்வாறே நீங்களும் தூய ஆவியானவரின் வல்லமையினால் பெலனடைந்து அவருக்காகச் சான்று பகர்வதற்கு முன் வாருங்கள். அதற்காகத் தூய ஆவியானவர் எவ்வேளையும் உங்களுக்கு வழிகாட்டுவார்.

**தூய ஆவியின் வல்லமையை அனுபவிப்போம்.**
**சான்று பகர்வோம்!**



***விண்ணப்பம்***

*அன்பான இறைவா தூய ஆவியானவரின் வல்லமையினால் பெலனடைந்து உமக்காகச் சான்று பகர்வதற்கு எங்களுக்கு வரம் அருளும்.*

*ஆமென்.*



## செயற்பாடு

1. தூய ஆவியானவரின் மூலமாக ஆரம்பத் திருச்சபை பெற்றுக் கொண்ட அனுபவங்கள் இரண்டு எழுதுக.

2. தூய ஆவியானவரில் பெலனடைந்த ஆரம்பக் கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட விசேட பண்புகள் மூன்று எழுதுக.

# 19 ஆரம்பக் கிறிஸ்தவ சபையில் பகிர்வு

**திருத்தூதர் பணிகள் 2: 42 - 47**

ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற விசேட போதனையில் கலந்து கொண்ட சந்தோசும், மேசாக்கும் அவர்கள் கற்றுக் கொண்டதை தம் தாயாரோடு பகிர்ந்து கொண்டதை கீழே தரப்பட்ட உரையாடல் காண்பிக்கின்றது.

**அம்மா** : மகனே இன்று ஞாயிறு பாடசாலையில் என்ன கற்றீர்கள்?

**சந்தோசு** : அம்மா இன்று எமக்கு பகிர்ந்துக் கொள்ளுதலின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கற்றுத் தந்தார்கள். எமக்கு எவ்வளவு தேவைகள் இருப்பினும் எம் மிடம் இருப்பதைப் பகிர்ந்துகொள்வது எவ்வாறு என்பதைக் காண்பித்தார்கள்.

**மேசாக்** : எங்களுக்கு அழகான காணொளிக் காட்சி காண்பிக் கப்பட்டது.

**அம்மா** : அது என்ன?

**சந்தோசு** : ஒரு சுத்திகரிப்பு நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஒருவர் அனுதினமும் சிற்றுண்டிச் சாலையைச் சுத்தம் செய்தார். அச் சிற்றுண்டிச் சாலையின் உரிமையாளர் அப்பெண்ணுக்கு எப்போதும் மிகுதியான உணவை வழங்கினார். அப் பெண் மிகவும் சந்தோசத்தோடு அவ்வுணவை வீட்டில் உள்ளவர்களோடு பகிர்ந்து உண்பது எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

**மேசாக்** : அது மட்டுமல்ல அம்மா. அவளின் தந்தை அவருக்குக் கிடைத்த உணவை வீட்டுக்குக் கொண்டு செல்லும்போது வழியில் சந்திக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்.

**சந்தோசு** : அவ்வாறே அவர்களுக்குக் கிடைத்த உணவிற்காக இறைவனுக்கு நன்றி கூறி சந்தோசத்தோடு அவர்கள் மீதமான இரவு உணவை உண்டனர்.

**மேசாக்** : இதைத் தான் அம்மா, போதகர் அவர்கள் எங்களுக்கு விளக்கினார். ஒவ்வொருவரும் தன்னிடம் இருப் பதைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்வரவேண்டும் எனக் கூறினார். மேலும் பகிர்ந்து கொள்வதற்கு எமது தேவைகள் தடையாக இருக்கக் கூடாது எனவும் கற்பித்தார். எமக்குள்ளவற்றை நாம் பகிர்ந்து கொள்வோமானால் இவ்வுலகில் எவருக் குமே தேவைகள், குறைவுகள் ஏற்படாது என போதகர் கூறினார்.

**அம்மா** : ஆம். அது தான் உண்மை பிள்ளைகளே, உங்க ளுக்குத் தெரியுமா? ஆரம்ப காலத்தில் எமது கிறிஸ்தவ சபையில் எந்தவிதமான தேவைகளும் குறைவுகளும் இருக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அவர்களிடம் காணப்பட்ட பகிர்ந்து கொள்ளும் குணமேயாகும்.

எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்வதின் முக்கியத்துவத்தை மேலேயுள்ள கலந்துரையாடலின் மூலமாக அறிகிறோம். பெந்தக் கோஸ்து நாளில் தூய ஆவியின் வருகையின் பின் திருச்சபையானது எண்ணிக்கையில் விருத்தியடைந்தது. அவ்வாறே ஆரம்பத்திருச்ச பையில் அவர்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொண்ட முறை திருவிவிலியத்தில் திருத்தூதர் பணிநூல்கள் 2:42-47 வரை இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

- நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர் எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.

- நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவை களுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர்.

- ஒவ்வொரு நாளும் அவர்கள் கோவிலில் கூடி வீடுகள் தோறும் அப்பத்தைப்பிட்டு பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர்.

இம் முன்மாதிரியின் படி சிறுவர்களாகிய உங்களால் பிறருடன் பகிர்ந்துகொள்ளக் கூடியதை ஆராய்ந்து பார்ப்போம்.



உங்களிடம் உள்ள உணவுகள், ஆடை அணிகள், புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.



உங்களிடம் உள்ள அறிவு, ஆற்றல், திறமைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.



வேலைப்பளு நிறைந்த சமூகத்தில் எமது பெறுமதிமிக்க நேரத்தை பிறரின் தேவைகளுக்காக அர்ப் பணித்தல்.




பிறரின் வெற்றியின் மகிழ்வை பகிர்ந்து கொள்ளுதல்



பிறரின் தோல்வியின் வேதனையை பகிர்ந்து கொள்ளல்.

நாம் ஆரம்பக் கிறிஸ்தவத் திருச்சபையைப் போன்று அதனைப் பின்பற்றி எம்மிடையே வாழும் பிறரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு நாம் முன்வருவோம்.



*மனன வாக்கியம்*

***நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர்.***

*(திருத்தூதர் பணிகள் - 2: 44- 45)*



## செயற்பாடு

1. ஆரம்பக் கிறிஸ்தவ சபையினர் பிறரின் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்தனர்?

2. கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் முறைகள் நான்கைக் குறிப்பிடுக.

# 20 புயலை அமைதிப்படுத்தல்

## மாற்கு 4: 35 - 41


உரு 20.1 இயேசு புயலை அமைதிப்படுத்தல்

இறைவன் எமக்குப் பெற்றுத் தந்த உலகத்தின் சுற்றுச் சூழலில் எத்தனையோ எழில்மிகு காட்சிகளை நாம் காண்கிறோம் அல்லவா? இவற்றில் கடற்கரைக் காட்சியானது மனதைக் கவரக் கூடிய அழகிய காட்சியாகும். அவ்வாறே இயேசு பணிசெய்தபோது கலிலேயாக் கடலானது மிகவும் விசேடமான ஓர் இடமாக காணப்பட்டது.

இயேசு மக்களுக்குப் போதனை செய்வதற்காக கடற்கரையைத் தெரிவு செய்தார். அவரின் சீடர்களிடையே மீனவர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் முகம் கொடுத்த புதுமையான அனுபவங்கள் மாற்கு 4:35 - 41 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றொரு நாள் இயேசு படகில் ஏறி கடற்கரையோரத்தில் போதனை செய்தார். மாலை நேரமாகிவிட்டதால் அவர் தம் போதனையை நிறைவுசெய்து அப்படகில் இருந்த தம் சீடர்களுக்கு பின்வருமாறு கூறினார்.

**இயேசு** : மக்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு நாம் கடலின் அக்கரைக்குச் செல்வோம்.

**முதலாவது சீடன்** : ஆம் ஆண்டவரே, நாம் இப்படகில் அக்கரைக்குச் செல்வோம்.

(சீடர்கள் படகைச் செலுத்தினர். இயேசு பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்)

**இரண்டாவது சீடன்** : வானத்தைப் பாருங்கள், பெரும் புயல் அல்லவா வருகின்றது?

**மூன்றாவது சீடன்** : ஆம்... ஆம் படகு நிரம்பத்தக்கதாக அலைகள் படகில் மோதுகின்றதல்லவா?

**முதலாவது சீடன்** : பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாம் ஆண்டவரை எழுப்புவோம்.

(அச்சம் கொண்டிருந்த சீடர்கள் தூங்கிக் கொண்டிருந்த இயேசுவை எழுப்பி இவ்வாறு கூறினர்.)

**சீடர்கள்** : போதகரே நாம் சாகப்போகிறோமே உமக்குக் கவலையில்லையா? எங்களுக்கு உதவி செய்யும்.

(தூக்கத்தில் இருந்த இயேசு விழித்தெழுந்து காற்றையும் கடலையும் கடிந்து கொள்ளுதல்)

**இயேசு** : ''இரையாதே அமைதியாயிரு''

(புயலை அமைதிப்படுத்தல்)

**இயேசு** : ''நீங்கள் ஏன் இப்படி அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?''

**சீடர்கள்** : "இவர் யாரோ காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே! இது மிகவும் புதுமையல்லவா?"

அன்று சீடர்களோடு கூட இயேசு இருந்தபோதும் அவர்களிடையே நம்பிக்கை இல்லாதபடியினால் அவர்கள் பயமடைந்தனர். இயேசு கடலை அமைதிப்படுத்திய பின்னர் அவர்களின் பயம் விலகியது.

எமது வாழ்க்கைப் பயணத்திலும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இயேசு எம்மத்தியில் எவ்வேளையும் இருக்கிறார் என்ற நம்பிக்கை எம்மிடையே இருக்க வேண்டும்.

**இறைவன் மீது நம்பிக்கை கொள்வோம்!**
**வாழ்வின் சவால்களை வெற்றிகொள்வோம்!**




***விண்ணப்பம்***

***அன்பின் இறைவா சிறுவர்களாகிய எம் வாழ்வில் வரும் பலவித சவால்களின் மத்தியில் எம் அருகில் இருந்து அந்த சவால்களை வெற்றி பெறுவதற்கு வழிகாட்டியருளும்.***
***ஆமென்.***

## செயற்பாடு

1. இயேசு புயலை அடக்கிய நிகழ்வை வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

2. இந்த உருவைப் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து உமது வாழ்வில் வரும் பலவிதமான சவால்களை அதில் எழுதுங்கள்.



# 21 இறைவன் தரும் சுகம்

**யோவான் 5: 1-15**

ஐந்தாம் தரத்தில் கற்கும் வசந்தன் என்னும் மாணவன் அனைவரது மனதையும் வென்ற ஓர் நல்ல சிறுவனாவான். திடீரென அவன் காலில் ஏற்பட்ட ஓர் பலவீனம் காரணமாக அவன் பெரிய துன்பத்திற்கு உள்ளானான். அவனால் நடப்பதற்கும் இயலாமல் போய்விட்டது. எனவே அவனின் பெற்றோர் அவனுக்கு எத்தனையோ வைத்திய பரிசோதனைகள் செய்தும் பராமரித்தும் அவனின் காலில் உள்ள பலவீனம் மாறவில்லை, அவனைப் பரிசோதித்த வைத்தியர்கள் வசந்தனுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமெனக் கூறினர். இதையறிந்த பெற்றோர் குடும்ப அங்கத்தவர்களோடு சேர்ந்து மகனுக்கு சுகம் வேண்டி இறைவனிடம் மன்றாடினார்கள்.


அதன் பின்பு ஒருநாள் வசந்தனைப் பரிசோதித்துப் பார்த்த வைத்தியர்கள் அவனின் நோயின்தன்மை குறைவடைந்திருப்பதாகவும் இனி அறுவைச் சிகிச்சை அவசியமில்லை எனவும் கூறினர். வசந்தன் நலமடைந்திருப்பது வைத்தியர்களுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் வசந்தனின் குடும்பத்தினர் அனைவரினதும் ஒரே நம்பிக்கையானது பரம வைத்தியரான ஆண்டவரே அவனைச் சுகப்படுத்தினார் என்பதாகும்.

இயேசு வாழ்ந்த காலத்தில் நோயாளர்களைச் சுகப்படுத்திய அநேக சம்பவங்கள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடவுளின் வழிநடத்தலுடன் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்து சுகத்தை எதிர்பார்த்திருந்த ஒருவர் சுகம்பெற்ற முறையைத் தேடிப் பார்ப்போம்.

கீழே குறிப்பிடப்பட்ட செயற்பாட்டை உமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதிசெய்து யோவான் நற்செய்தி 5:1-15 வசனங்களின்படி இடைவெளிகளை நிரப்புக.


| | |
|---|---|
| நகரம் → | இயேசு யூதர்களின் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக ............. நகருக்குச் சென்றார். (யோவான் 5:1) |
| மக்கள் கூடியிருந்த இடம் → | ............ குளத்தைச் சுற்றியுள்ள ........... மண்டபங்களில் கூடி இருந்தனர். (யோவான் 5:2) |
| கூடியிருந்தவர்களின் நோய்கள் → | அவற்றில் .............. , ................ , ............... கூடியிருந்தனர். (யோவான் 5:3) |
| கூடியிருந்த மக்களின் நோக்கம் → | ஆண்டவரின் தூதர் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்கும்போது அதில் முதலில் இறங்குபவர் .......... என எதிர்பார்த்திருந்தனர். (யோவான் 5:4) |
| இயேசு அவதானித்த நபர் → | ............ ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்த ஒருவரை இயேசு அவதானித்தார். (யோவான் 5:5) |
| இயேசு அவரிடம் கேட்ட கேள்வி → | ....................? என்று கேட்டார். (யோவான் 5:6) |
| நோயாளரின் பதில் → | ஐயா .............. கலங்கும்போது என்னைக் குளத்தில் .................... ஆள் இல்லை (யோவான் 5:7) |
| இயேசு நோயாளரிடம் கூறிய வார்த்தை → | இயேசு அவரிடம் .................... படுக்கையை ............ நடந்து செல்லும் என்றார். அவர் நலமடைந்து தம்முடைய ............. எடுத்துக் கொண்டு நடந்தார். (யோவான் - 5:8) |



உரு 21.1 பெத்சதா குளத்தருகில் இருந்த நோயாளரைக் குணப்படுத்தல்

முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்று எவருடைய உதவியுமின்றி பெத்சதா குளத்தின் அருகில் இருந்த உடல் நலமற்றவர் மீது இரக்கம் கொண்ட இயேசு அவரை நலமடையச் செய்தார். எனவே எவ்வேளையும் பரம வைத்தியரான இறை தந்தையில் நம்பிக்கை கொள்வது அவசியமாகும்.

**இயேசுவில் நலம் பெறுவோம்**
**பெற்ற நலத்துக்காக சான்று பகர்வோம்!**



*மனன வாக்கியம்*

*இயேசு அவரிடம் "எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்" என்றார்.*
*யோவான் 5:8*



## செயற்பாடு

நான்கு குழுவாகப் பிரிந்து கீழே தரப்பட்ட சம்பவங்களைத் திருவிவிலியத்தில் தேடி வகுப் பறையில் முன்வைக்கவும்.


| A | B |
|---|---|
| முடக்குவாத முற்றவரைக் குணப்படுத்தல் �லூக்கா 5:17-26 | தொழுநோயாளரைக் குணப்படுத்தல் �லூக்கா 5:12 -16 |
| **C** | **D** |
| வலிப்பு நோய் சிறுவனைக் குணமாக்குதல் �லூக்கா 9:37-43 | பேதுருவின் மாமியைக் குணமாக்குதல் �லூக்கா 4: 38 -41 |

# 22 மரணத்தைக் கடந்த இறைவல்லமை

## மாற்கு 5:21 - 24, 35 - 43

இயேசு மரணத்தைக் கடந்து செயற்பட்ட நிகழ்வுகள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒரு நிகழ்வானது யாயிரின் மகளை உயிரோடு எழுப்பிய நிகழ்வாகும்.

மரிக்குந்தறுவாயில் இருக்கும் தனது மகளின் சுகம் வேண்டி இயேசுவிடம் யாயிர் என்னும் ஒருவர் வந்தார். அவர் தொழுகைக் கூடத் தலைவராவார். அவர் தனது மகள் மரிக்கும் தறுவாயில் இருந்த வேளையில் கடற்கரையில் போதனை செய்து கொண்டிருந்த இயேசுவைத் தேடி வந்து அவர் காலில் விழுந்து இவ்வாறு வேண்டினார்.




உமது மகள் இறந்து விட்டாள் போதகரைத் தொந்தரவு செய்யாதீர்.
அஞ்சாதீர்! நம்பிக்கையோடே இரும்.


நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? அவள் இறக்கவில்லை உறங்குகிறாள்.







இவ்வாறு இயேசு யாயிரின் மகளை மரணத்தில் இருந்து உயிர்த்தெழச் செய்தார்.

இந்நிகழ்வின்படி யாயிரின் கதையில் இருந்து எமது வாழ்விற்கு பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் பின்வருமாறு:

1. **நம்பிக்கையோடு இயேசுவைத் தேடி அவர் அருகில் செல்லுதல்**
2. **தாழ்மையோடு இருத்தல்**
3. **இயேசுவின் பாதங்களில் வீழ்ந்து வணங்குதல்**
4. **விடா முயற்சியுடன் செயற்படுதல்**
5. **திடமான நம்பிக்கையோடு இருத்தல்**
6. **இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்**

யாயிர் இயேசுவில் நம்பிக்கை கொண்டிருந்தார். இதனால் இயேசு யாயிரின் மகளைக் குணப்படுத்தினார். இவ்வாறு உங்கள் வாழ்வில் ஏற்படும் பலவித துன்பமான அனுபவங்களின் மத்தியில் யாயிரைப் போன்று நம்பிக்கையோடு செயற்பட முயற்சி செய்யுங்கள். அப்போது இறைவனின் அருளும் நலமும் உங்களோடிருக்கும்.

**யாயிரைப் போன்று இறைவனில் நம்பிக்கை கொண்டு வெற்றி பெறுவோம்!**



***விண்ணப்பம்***

*அன்பின் இறைவா! அனுதின வாழ்வில் நாம் முகம் கொடுக்க வேண்டிய பலவிதமான நோய்களில் இருந்து நலம்பெற உதவி செய்தருளும். யாயிரைப் போன்று நம்பிக்கையோடு செயற்பட தேவையான துணிவையும் பெலத்தையும் தாரும்.*

*ஆமென்.*



## செயற்பாடு

சரியான விடையைத் தெரிவு செய்யுங்கள்.

1. யாயிர் தொழுகைக் கூடத்தின் (தலைவர்/தொழுநோயாளி)
2. யாயிர் இயேசுவைத் தேடி (தேவாலயத்திற்கு/கடற்கரைக்கு) சென்றார்.
3. இயேசு கூறியபடி சிறுமியைப் பார்த்து (உறங்கிக் கொண்டு/ களைப்படைந்து) இருக்கிறாள் என்றார்.
4. யாயிரின் மகளுக்கு இயேசு மீண்டும் வாழ்வை (பெற்றுக் கொடுத்தார்/ பெற்றுக் கொடுக்கவில்லை)
5. சிறுமிக்கு (உணவு/குடிப்பதற்கு) கொடுக்கும்படி இயேசு கூறினார்.

# 23 பழைய ஏற்பாடு

திருவிவிலியமானது இறைவார்த்தைகள் அடங்கிய ஒரு புனித நூலாகும். இது முக்கியமான இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.




இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் அடங்கிய நூல்கள் எவை என்பதைக் கீழே தரப்பட்ட கவிப்பாடலினூடாகப் பார்ப்போம்.

1. இறைவனின் ஆசி - பெற்ற நாம் அனைவரும்
   திருவிவிலிய நூல்களை - அறிந்து கொள்வோம் பக்தியோடு//

2. தொடக்க நூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை
   இணைச்சட்டம் ஆகிய முதல் ஐந்நூலும் பஞ்சாகமமே//

3. யோசுவா நூல் - நீதித் தலைவர்கள், ரூத்து
   சாமுவேலின் இரு நூல்கள் - அரசர்களின் இருநூல்களுமே//

4. குறிப்பேடு இருநூல்கள் - எஸ்ரா, நெகேமியா
   துணிவுமிகு அரசி எஸ்தர் - துன்புற்ற யோபுவின் நூல்//

5. திருப்பாடல்கள் - நீதிமொழிகள், சபை உரையாளர்
இனிமைமிகு பாடல் நூல்கள் - புத்தொளி அளித்திடுமே//

6. எசாயா, எரேமியா - இறைவாக்கினருடன்
புலம்பல் கவிதையும் எசேக்கியேல் இறைவாக்கினரும்//


7. தானியேல் ஓசேயா அவர்கள் - யோவேல், ஆமோஸ் நூல்களும்
ஒபதியா, யோனா, மீக்கா - நாகூம், அபக்கூக்கு, செப்பனியா//

8. ஆகாய், செக்கரியா, மலாக்கி - ஆகிய இறுதி நூல்களோடு
பழைய ஏற்பாட்டின் நூல்கள் - முப்பத் தொன்பதே//

பழைய ஏற்பாடு எமக்கு அவசியமாக இருப்பது ஏன்?

- இஸ்ரயேலருடன் கடவுள் செயற்பட்ட முறைகள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளதால்.
- ஆரம்பக் கிறிஸ்தவசபை அவர்களின் வழிபாட்டில் பயன் படுத்தியப்படியால்.
- கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய இறைவாக்குகள் குறிப்பிடப் பட்டுள்ளமையால்.
- கடவுள் அதனூடாக எம்முடன் கதைக்கின்றபடியால்.

திருவிவிலியத்தை வாசிப்போம்!
இறைவார்த்தைக்கு மதிப்பளிப்போம்!
அதற்கேற்ப வாழ்வோம்!



*மனன வாக்கியம்*

*என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!*

*(திருப்பாடல்கள் 119:105)*



## செயற்பாடு

கீழே தரப்பட்ட குறுக்கெழுத்துப் புதிரை பூரணப் படுத்துக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வி 1 | | தா 4 | | | ல் | |
| | | | | | | | | மு 3 |
| | | த | | | | | | |
| | | | | தொ 2 | | | | |
| தி 5 | | ப் | | | ல் | | | த் |
| | | | | | | | | |
| | | ய | | க | | | | ன் |
| | | | | | | | | |
| | | ம் | | ல் | | | | து |

மேல் இருந்து கீழ்

1. இஸ்ரயேல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதைக் குறிப்பிடும் நூல்
2. திருவிவிலியத்தின் முதலாவது நூல்
3. பழைய ஏற்பாட்டில் அடங்கிய நூல்களின் எண்ணிக்கை

இடமிருந்து வலமாக

4. சிங்கக் குகையில் இருந்த நம்பிக்கையாளரின் விபரங்கள் அடங்கிய நூல்
5. தாவீது அரசனின் பாடல்கள் அடங்கிய நூல்

# 24 ஆண்டவரே நம் ஆயர்

## திருப்பாடல்: 23


தாவீது அரசன் இளவயதில் ஆயனாகப் பெற்ற அனுபவங்கள் 23ம் திருப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பாடலின்படி தாவீது அரசர் ஆண்டவரைத் தனது நல்லாயனாக அறிமுகம் செய்துள்ளார்.

*ஆண்டவரே என் ஆயர்,*
*எனக்கேதும் குறையில்லை*
*பசும்புல் வெளிமீது எனை*
*அவர் இளைப்பாறச் செய்வார்.*
*அமைதியான நீர் நிலைகளுக்கு*
*எனை அழைத்துச் செல்வார்.*
*அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்*
*தம் பெயர்க்கேற்ப எனை*
*நீதிவழி நடத்திடுவார்.*
*மேலும் சாவின் இருள் சூழ்*
*பள்ளத்தாக்கில்*
*நான் நடக்க நேர்ந்தாலும்,*
*நீர் என்னோடு இருப்பதால்*
*எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்.*
*உம்கோலும் நெடுங்கழியும்*
*என்னைத் தேற்றும்*
*என்னுடைய எதிரிகளின் கண்*
*முன்னே எனக்கொரு விருந்தினை*
*ஏற்பாடு செய்கின்றீர்.*

***என் தலையில் நறுமணத் தைலம்
பூசுகின்றீர், எனது
பாத்திரம் நிரம்பி வழிகின்றது
உண்மையாகவே
என் வாழ்நாள் எல்லாம்
உம் அருள் நலமும் பேரன்பும்
எனைப் புடைசூழ்ந்து வரும்,
நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.***

**(திருப்பாடல் - 23)**

திருப்பாடல் 23ம் அதிகாரத்தில் நல் ஆயரான ஆண்டவரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லாயரிடம் காணப்படும் குணாதிசயங்கள்.





இயேசு நம் மத்தியில் வந்து நல்லதோர் ஆயராகச் செயற்பட்ட முறையைப் புதிய ஏற்பாட்டிலே நாம் காண்கிறோம். பின்வரும் பாடல் இதை விளக்குகின்றது.



உரு 24.1 யாயிருவின் மகளை குணப்படுத்தல்

**கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே தாழ்ச்சியடையேன் என்றுமே அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்**



உரு 24.2 ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்

**ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை ஆனந்தத்தால் நிறைக்கிறாரே மகிமையின் நாமத்தினிமித்தம் அவர் தம் நீதியின் பாதையில் நடத்துகிறார்**



உரு 24.3 புயலை அமைதிப்படுத்தல்

**மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும் மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன் கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே**

**சத்துருக்கள் முன்னில் எனக்காக பந்தியொன்றாயத்தம் செய்தார் என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து என் பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார்**



ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும் நன்மை கிருபை தொடரும் கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து நித்திய நாட்களாய் நிலைத் திருப்பேன்.

உரு 24.4 இயேசு பிள்ளைகளை நேசித்தல்

எமது நல்லாயரான இயேசு அன்போடு செயற்படுகிறார்.

அவரின் கீழ்ப்படிவுள்ள மந்தையாக அவர் காட்டிய வழியில் பயணிப்போம்.



***விண்ணப்பம்***

*அன்பு நிறைந்த இறைவா!*
*எமது நல்லாயரான இயேசுவில் நம்பிக்கை வைத்து அவர் எமக்குத் காட்டிய வழியில் பயணம் செய்வதற்குத் தேவையான பெலனையும் துணிவையும் தந்தருளும்.*

*ஆமென்.*



## செயற்பாடு

திருப்பாடல் 23ம் அதிகாரத்தின் படி இடைவெளி களை நிரப்புக.

1. ஆண்டவரே என் .............................. எனக்கேதும் குறையில்லை ................. மீது எனை அவர் ......................... செய்வார். அமைதியான .................... எனை ............... செல்வார்.
2. நல்லாயரிடம் காணப்படும் பண்புகள் நான்கு எழுதுக.